**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.**
**தலைவர்** | **பொதுச்செயலாளர்**


**சுற்றறிக்கை எண் 09 / 2017** 27-06-2017

அன்புடையீர்

வணக்கம். தேர்வுநிலை வருவாய் மேலாளர்களுக்கு 1.1.2003 முதல் ரூ.5850-200-11050 வழங்கப்பட்டதற்குப் பதிலாக ரூ.8100-275-15225 வழங்கிடவேண்டும் என்ற நமது சங்கத்தின் கோரிக்கை ஏற்கப்பட்டு 23.5.2016-ல் சென்னை தொழிலாளர் தீர்ப்பாய்வம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் இத்தீர்ப்பின் மீது நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திட, தடை பெற்றிட தீவிரம் காட்டியது. இந்நிலையில் ஓராண்டு முடிவுறும் நிலையில் நமது சங்கம் தொழிலாளர் தீர்ப்பாய்வத்தின் உத்திரவை அமுல்படுத்திட வேண்டும் என்றும், இடைக் காலத்தில் ரூ.3½ கோடி நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் (W.P.No.11087/2017) வழக்கு தொடுத்துள்ளோம். நமது மனு 01.06.2017-ல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டு, பதிலளித்திட நிர்வாகத்திற்கு நோட்டீஸ் அனுப்பப் பட்டுள்ளது.

❖ நமதுசங்கம் இணைந்திருக்கும் PSI-யின்சார்பில் இளைஞர்களுக்கான கருத்தரங்கு ஜூன் 2 முதல் 4 வரை பெங்களூரில் சிறப்பாக நடை பெற்றது. நமது சங்கத்திலிருந்து திருமதி.A.ஏஞ்சலின் அன்பரசி திருப்பத்தூர்,திரு. R.திவாகரன் கோவை-வடக்கு, திரு.K.கணபதி மேட்டூர், திரு.B.சபரிநாதன், உடுமலைப்பேட்டை ஆகியோர் கலந்து கொண்டனர்.

❖ சிறப்புநிலை பெறாமல் பதவி உயர்வு பெற்ற முதியவர்களுக்கும், சிறப்புநிலை பெற்று பதவி உயர்வு பெறும் இளையவர்களுக்கும் இடையே, உள்ள ஊதிய ஏற்றத் தாழ்வினை சரிசெய்திட வாரியம் 20.6.2017-ல் உத்திரவு வழங்கியுள்ளது. இந்த உத்திரவு நமது சங்கத்தின் தனித் தன்மை வாய்ந்த சாதனை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ( பார்க்க நமது சங்கக்கடிதம்.செய்திமடல் ஜுன்2014-பக்கம்-17. 2)ஜுலை2014, பக்கம்-3 **"ஸ்பெஷல் கிரேடு அனாமலி"** தலையங்கம். 3) சங்கக்கடிதம். டிசம்பர் செய்திமடல் பக்கம்-7. 4) ஏப்ரல் செய்திமடல். பக்கம்-8 (கோரிக்கை எண்-6).

❖ வருவாய் மேலாளர் பொறுப்புக்கு 2-ம் கட்டமாக 501 பேருக்கும், கணக்கீட்டு ஆய்வாளர் பொறுப்புக்கு 869 பேருக்கும் சமீபத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

❖ 15.6.2017 தேதியிட்ட சுற்றறிக்கை 8-ல் முதல் கட்டமாக சேர்த்து அனுப்பிய தீர்மானம் மற்றும் துணைவிதிகள் திருத்தத்தில் ஓரிரு தவறுகள் உள்ளன. 2-ம் கட்டமாக கிளைச்செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டதில் அத்தவறுகள் சரி செய்யப்பட்டுவிட்டன. முழுமையாக சரி செய்யப்பட்ட தீர்மானங்கள், துணைவிதி திருத்தங்கள் மாநிலச் செயற்குழு நிகழ்ச்சிக் குறிப்புடன் ஜுலை மாத செய்திமடலில் வெளியிடப்படும்.

❖ மின்வாரியம்துவங்கப்பட்டு 60 ஆண்டுகள் 1.7.2017-ல் முடிவுற்று வைரவிழாவினை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் பொருட்டு மின்வாரியத்தின் பிரம்மாண்டமான வளர்ச்சிக்குக் காரணமான தொழிலாளர், அலுவலர்களை ஊக்குவிக்கும் வகையில் 2 சிறப்பு ஆண்டுயர்வுகளும், ஓய்வூதியர்களுக்கு ரூ.2000- ரொக்கப்பரிசும் வழங்கிட வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர். கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள் மற்றும் மத்தியசங்கப் பொறுப்பாளர்கள்.

நகல். செய்திமடல்

பெறுநர். 24.06.2017

மரியாதைக்குரிய
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும்
பகிர்மானக்கழகம்,
சென்னை – 600 002.

ஐயா,

பொருள் : தமிழ்நாடு மின்வாரியம் 60-வது ஆண்டு வைரவிழா- தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சிறப்பு ஆண்டுயர்வு, ஓய்வூதியர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்கிடக்கோருதல்.

1.7.1957-ல் துவங்கப்பட்ட தமிழ்நாடு மின்சாரவாரியம் 60 ஆண்டுகள் நிறைவுற்று 1.7.2017-ல் வைரவிழா கொண்டாடவிருக்கிறது.

இந்த 60 ஆண்டு இடைவெளியில் மின்உற்பத்தி, கொண்டு செல்லுதல், மின்விநியோகம் ஆகிய முப்பரிமாணங்களிலும் பிரம்மாண்டமான வளர்ச்சியினை நாம் பெற்றிருக்கிறோம்.

ஒரு காலத்தில் மின்சாரம் வந்தால் ஆச்சரியம் என்று பட்டிமன்றங்களிலும், தொலைக்காட்சி விவாத மேடைகளிலும் கிண்டலடிக்கப்பட்ட மின்சாரவாரியம், நஷ்டத்தை ஒப்பிடுவதற்காக ‘வெள்ளையானை’ என்று வர்ணிக்கப்பட்ட மின்சாரவாரியம், இன்றைக்கு மின்வெட்டே இல்லை, அபரிமிதமான மின்சாரம். லாபத்தை நோக்கி பீடு நடை என்று புதிய வரலாற்றை தமிழக மின்சாரவாரியம், தங்கள் சீரியத் தலைமையில் தொழிலாளர், அலுவலர் ஒத்துழைப்புடன் படைத்திருப்பது ஒரு நிதர்சனமான உண்மை.

தமிழக அரசின் சமூகப் பொருளாதார கொள்கையை நிறைவேற்றுவதற்கும், மக்கள் நலம் காக்கும் அரசாக செயல் படுவதற்கும், லட்சக்கணக்கான விவாசாயிகளுக்கு, குடிசைகளுக்கு, வீடுகளுக்கு இலவசமாகவும், சகாய விலையிலும் கொடுத்தப் பிறகும், நமது மின்சாரவாரியம் நட்டக்கணக்கைத் தாண்டி, லாபத்தை நோக்கி செயல்பட்டு வருவதற்கு தாங்கள் அனைத்து தொழிலாளர்களையும், அலுவலர்களையும் பாராட்டி முதல் கடிதம் 20.5.2017-ல் எழுதியிருப்பதற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

2015 மற்றும் 2016-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட புயல், சூறாவளிக்காற்று, மழை, வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மின்தடங்களை குறுகிய காலத்தில் எல்லோரும் வியப்புடன் பாராட்டும் வகையில் மின் தடங்களைச் சரி செய்து பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்கியது தொழிலாளர்கள், அலுவலர்களின் வரலாற்றுச் சாதனையாகும். இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வரும் தொழிலாளர்கள், அலுவலர்களுக்கு 2 ஆண்டு சிறப்புயர்வும், ஏற்கனவே மின்வாரியத்தில் பணியாற்றி தற்போது ஓய்வூதியம் பெறுவோருக்கு 2000-ரூபாய் வெகுமதியும் 60-வது ஆண்டு வைர விழாவை முன்னிட்டு வழங்கிடுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள
(ஒப்பம்)--------------
இர.சந்திரசேகரன்
பொதுச்செயலாளர்

நகல்.

வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள் மற்றும்
மத்தியசங்கப்பொறுப்பாளர்கள்.